‘திராவிட மாடல்’ அரசின் நாயகர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த

# ‘TAPS’ ஓய்வூதியத் திட்டத்தின் சிறப்பம்சங்கள்!

## சட்டப் பேரவையில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!



**சென்னை, பிப்.22 - சட்டப்பேரவையில் இடைக் கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத் தின் போது குறுக்கிட்டு விளக்கம் அளித்த நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, ‘திராவிட மாடல்’ அரசின் நாயகர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண் டுவந்துள்ள “புதிய TAPS ஓய்வூதி யத் திட்டத்தின் சிறப்பம் சங்கள் யாவை?” என்பது குறித்து விரி வான விளக்கம் அளித்தார்.**

அமைச்சர் குறிப்பிட்ட தாவது:-

UPS திட்டத்தில் இருக் கக்கூடிய முக்கியமான கூறு கள், எது முக்கிமான கூறு களோ அதை இந்த TAPS Assured Pension Scheme-ல் நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஏன் போராட்டக் களத் திற்கு வந்திருக்கக்கூடிய மிகப்பெரிய இயக்கங்கள், அதில் முன்னெடுத்திருந்த இயக்கங்கள் இதை முழு மனதோடு வரவேற்றுக் கொண்டு, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று இதை ஏன் அவர்கள் வர வேற்று முதலமைச்சர் அவர் களுக்கு பாராட்டு கூட்டம் நடத்தினார்கள் என்றால் நீங்கள் உறுதியளிக்கப்பட் டிருக்கக்கூடிய மாத ஓய்வூ தியத்தினுடைய கடைசி மாதம்தான் OPSல் 50 சதவி கிதம் இருந்தது. அது இப் போது TAPSல் வந்துவிட் டது. அதேபோன்று inflationல் இருக்கக்கூடிய DA, OPSல் இருந்தது. அது இப்போது இருக்கக்கூடிய TAPSல் வந்துவிட்டது. Family pension பழைய ஓய்வூதியத் திட்டத்தில் இருந்தது. இப் போது TAPSல் family pension வந்துவிட்டது. அதேமாதிரி, குறைந்தபட்ச ஓய்வூதியம் அப்போது இருந்தது. இப் போது கொடுக்கப்பட்டது. அதற்கு பிறகு gratuity இறப்பு பணிக்கொடை gratuity இப்போது நாம் கொடுத்துவிட்டோம். Commutation benefits பழைய ஓய்வுதியத் திட்டத்தி லிருந்து இப்போது கொடுத்து விட்டோம்.

ஏறத்தாழ அதில் இருக் கக்கூடிய அனைத்து நன்மை களையும் அவர்கள் எதிர் பார்த்ததற்கு மேலாக கடும் நிதிநெருக்கடிக்கு நடுவிலும் முதலமைச்சர் அவர்கள் அந் தத் திட்டத்தை அறிவித்த காரணத்தினால்தான் அவர் கள் ஏற்றுக்கொண்டிருக்கி றார்கள். (மேசையைத் தட் டும் ஒலி) அதேபோன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல் கின்றபோது, நீங்கள் UPS Unified Pension Schemeஐ எடுத்துவிட்டு அப்படியே போட்டுவிட்டீர்கள் என்று சொன்னார்கள். ஆனால், அது அப்படி கிடையாது. அந்தத் திட்டத்தில் பார்த் தீர்களென்றால் ஏறத்தாழ இப்போது நான் சொன்னது போன்று 50 சதவிகிதம் assured அவர்களுக்குக் கொடுக்கிறோம். அவரு டைய கடந்த 12 மாத ஊதி யத்தினுடைய சராசரியை எடுத்துக்கொண்டு அதில் தான் அவர்கள் சராசரி ஊதி யத்தில் எடுத்துக்கொண்டி ருந்தார்கள். அப்படி பார்த்தால் யாரேனும் ஒரு வருக்கு முன்னால்-நாம் கடைசி மாதம் எடுக்கி றோம். டிசம்பரில் ஒருவர் பணி ஓய்வு பெறுகிறார் என் றால் அவர்களுக்கு அந்த நேரத்தில் பதவி உயர்வு கிடைத்திருக்கும். அந்தப் பதவி உயர்வு பெற்ற scaleஐ எடுத்திருக்க முடியாது. ஆனால், நாம் கொண்டு வந் திருக்கக்கூடிய திட்டத்தில் ஓய்வூதியத்திற்கு முன்னால் கிடைக்கக்கூடிய பதவி உயர்வு, ஆண்டு ஊதிய உயர்வு, அதேபோன்று ஊதி யக் குழுக்களினால் வரக்கூ டிய பலன்கள் ஆகிய எல்லா வற்றையும் எடுத்துக் கொண்டு மொத்தத்தில் கடைசி சில மாதங்களில் அவர்களுக்கு கிடைத்திருந் தாலும்கூட ஒரு சதவிகிதம் கூட அதில் அவர்களுக்கு பாதிப்பு இல்லாமல் நாம் கொண்டு வந்திருப்பதுதான் மிக மிக முக்கியமான ஒன்று.

இன்னும்கூட சொல்ல வேண்டுமென்றால் அவர்க ளுடைய spouse அவர்க ளுக்கு மட்டும் இருந்தது. அவர்களுடைய குழந்தைக ளுக்கு இல்லை. ஆனால், தகுதியான குடும்ப உறுப்பி னர்களுக்கும் இந்த ஓய்வூதி யத்தை நாம் UPS-விருந்து மாறுபட்டு இந்தத் திட்டத் தில் கொண்டு வந்திருக்கி றோம். அதேபோன்று நான் ஏற்கெனவே சொன்னதைப் போன்று commutationல் கொண்டு வந்திருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. UPSல் பார்த்தீர்களென்றால் corpus withdrawal திரள் நிதியிலிருந்து எடுக்கக்கூடிய துதான் வருகிறது. அப்படி பார்த்தால் என்ன ஆகிறது என்றால் அவர்களுக்கு அடிப்படையாக இருக்கக் கூடிய ஓய்வூதியமும், DAவும் நிரந்தரமாக குறைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருந் தது. அதில் முழுத் தொகையை அவர்கள் பெற முடியாது. எனவேதான் TAPSல் இதையெல்லாம் நாம் செய்திருக்கிறோம். அதைபோல, மிக மிக முக்கி யமாக குறைந்தபட்சம் தகுதி பணிக்காலம் நிறை வேறாத அரசு ஊழியர்க ளுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை நாம் உறுதி செய்திருக்கிறோம்.

எனவே தான் இவ்வளவு சிறப்பான கூறுகள் TAPS, Assured Pension Schemeல் இருப் பதால் இதை நீங்கள் UPS என்று எடுத்துக்கொள்ள முடியாது. UPSலிருந்து முழு மையாக ஊழியர்களின் நல னுக்காக பிரத் யேகமாக முதலமைச்சர் அவர்கள் உரு வாக்கித் தந்திருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப் பிட்டார்.

---

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ பயிற்சி பாசறைக் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், வில்லிவாக்கம், அம்பத்தூர், திரு.வி.க நகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட பாகங்களின் வெல்லும் தமிழ் பெண்கள், பாகப் பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறை கூட்டங்கள் நடைபெறும் விவரம்:

| நாள்/ நேரம் | வெல்லும் தமிழ் பெண்கள் தொகுதி பொறுப்பாளர் | இடம் | பகுதி |
|---|---|---|---|
| 22.2.2026 ஞாயிறு காலை 10 மணி | மேயர் பிரியா ராஜன் தலைமை செயற்குழு உறுப்பினர் | அம்பேத்கர் திருமணமண்டபம், மங்களபுரம் | செ.தமிழ்வேந்தன் எம்.சாமிகண்ணு திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு பகுதி கழகச் செயலாளர்கள் |
| 22.2.2026 ஞாயிறு மாலை 4 மணி | சரிதா மகேஷ்குமார் எம்.சி தலைமை பொதுக்குழு உறுப்பினர் | முருகன் திருமண மண்டபம், நால்வர் திருமண மாளிகை, SRP கோவில் தெரு, அகரம். | எ.நாகராசன் ஐ.சி.எப்.வ.முரளிதரன் கொளத்தூர் மேற்கு/கிழக்கு பகுதி கழகச் செயலாளர்கள் |
| 22.2.2026 ஞாயிறு காலை 10 மணி | டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் | ஸ்ரீலட்சுமி மகால், M.T.H.ரோடு, மகாவீர் கார்டன், டெலிபோன் எக்சேஞ்ச் அருகில் | ஜோசப்சாமுவேல் MLA DSP.ராஜகோபால் எம்.சி MTR.நாகராஜ் அம்பத்தூர் வடக்கு/ தெற்கு/ கிழக்கு பகுதி கழகச் செயலாளர்கள் |
| 22.2.2026 ஞாயிறு மாலை 4 மணி | ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் | மகேஷ் மகால் PB ரோடு, சூளை | சொ.வேலு, எம்.சி வி.சுதாகர் எழும்பூர் வடக்கு/ தெற்கு பகுதி கழகச் செயலாளர்கள் |
| 22.2.2026 ஞாயிறு காலை 11 மணி | இரா.கலைச்செல்வி தலைமை பொதுக்குழு உறுப்பினர் | நாராயண குருவய்ய செட்டி சாரிட்டிஸ் சத்திரம் 48, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை-1. | எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர் துறைமுகம் மேற்கு/கிழக்கு பகுதி கழகச் செயலாளர்கள் |
| 22.2.2026 ஞாயிறு மாலை 4 மணி | சுதா தீனதயாளன் எம்.சி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் | WPA சௌந்தபாண்டியன் பள்ளி வளாகம், அயனாவரம் | வே.வாசு வில்லிவாக்கம் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் |
| 22.2.2026 ஞாயிறு மாலை 5 மணி | சுதாதீனதயாளன் எம்.சி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் | 94வது வார்டு மாமன்ற அலுவலகம் (சேர்மன் அலுவலகம்) சிட்கோ நகர் | கூ.பீ.ஜெயின் வில்லிவாக்கம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் |

மேற்கண்ட கூட்டங்களில் அந்தந்த தொகுதி/பகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டகழகச் செயலாளர்கள், மாவட்ட/பகுதி/வட்ட மகளிர் நிர்வாகிகள், வெல்லும் தமிழ்பெண்கள் பாக பொறுப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

## தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 27-02-2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் **“கலைஞர் அரங்கத்தில்”** எனது தலைமையில்;

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் என். மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் - வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி. பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ. சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன், பி.டி. செல்வகுமார், ஜெ. பாலகங்காதரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா;
2. சட்டப்பேரவைத் தேர்தலில் நமது அணியின் கோரிக்கைகள்
3. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள்
4. ஆக்கப் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.02.2026

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

---

## தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணியின்

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற 24.02.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் சேலம் மாவட்டக் கழக அலுவலகமான ‘கலைஞர் அறிவாலயத்தில்’ நடைபெற உள்ளதால் மாநில நிர்வாகிகள் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

பொருள்:
1. மார்ச் 1 கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் பிறந்த நாள் குறித்து.
2. 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் சம்பந்தமாக
3. அணியின் ஆக்கப்பணிகள் குறித்து

**டி.செங்குட்டுவன்**
மாநில செயலாளர்.
அமைப்புசாரா ஓட்டுநர் அணி

---



மாதவரம் புனித அன்னாள் மகளிர் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட முகாமில் பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் பங்கேற்று மரம் நடும் விழாவை துவக்கி வைத்தார் . இதில் புனித அன்னாள் கல்லூரியின் தலைவர் அன்னை முனைவர் லீமா ரோஸ், கல்லூரி வளர்ச்சி அதிகாரி பெனிட்டி குமாரி, முதல்வர் அன்னம்மாள் அற்புதமேரி, நாட்டு நல பணி திட்ட அலுவலர் அனுசியா, 17வது வட்டச் செயலாளர் கருணாகரன், பாலாஜி, மூர்த்தி, சண்முக பிரியன், எம்.என்.அஜய் தென்னவன், வக்கீல் எம்.என்.தளபதி, மைக்கேல், திவாகர், செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

# மாதவரம் புனித அன்னாள் மகளிர் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட முகாம்!

## புழல் எம்.நாராயணன் பங்கேற்று மரம் நடும் விழாவை துவக்கி வைத்தார்!

சென்னை, பிப். 22- மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலக் கடைகள் அமைந்துள்ளது புனித அண்ணாள் மகளிர் கல்லூரி இக்கல்லூரியில் நாட்டு நடப்பனை திட் டம் ஏழு நாட்களாக 17 வது வட்டம் வடபெரும் பாக்கம் சமுதாயக்கூடத் தில் நடைபெற்றது

ஏழு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற முகாமில் மாணவிகள் வட பெரும்பாக்கம் அரசு ஆதி திராவிட நல துவக்க பள் ளிக்கு வர்ணம் பூசி பள்ளியை சுத்தம் செய்து கொடுத்தனர் பள்ளியின் சுற்றுச்சூழலில் ஓவியங்கள் வரைந்து பார்ப்போரை கவரும் வகையில் செய்த னர்

இளைஞர்கள் தவறான வழியில் செல்லக்கூடாது என்பதற்காக போதை பொருட்களை பயன்படுத் தக் கூடாது என்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி னார்கள்

சின்ன தோப்பு அரசு பள்ளியில் மருத்துவ முகாம் நடத்தி நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இதில் பயன்பட்டனர்

நிறைவு நாளில் சமூக அக்கறை உள்ள நாடகங் கள் மூலம் சிறப்பான கருத் துக்களை எடுத்துக் கூறி னார்கள் வடபுரம்பாக்கம் சின்னத்தோப்பு அருகில் உள்ள குளத்தை சுத்தம் செய்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செய்து கொடுத்தனர்

நிறைவு நாளில் மாதவ ரம் வடக்கு பகுதி செயலா ளர் புழல் நாராயணன் கலந்துகொண்டு சிறப்பாக செயல்பட மாணவிக ளுக்கு பரிசுகளை வழங்கி னார் மேலும் தொடர்ந்து ஏழு நாட்களாக தங்கள் பகுதியில் பணிபுரிந்த மாணவிகளுக்கு தனது கரங்களால் அறுசுவை பிரி யாணி வழங்கி வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்

---





---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஜே. அகத்தியப்பன்

**பிப்ரவரி 22 (2005)**



**காஞ்சிபுரம் நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.**

**காஞ்சிபுரம் நகரக் கழகப் பொறுப்பாளர், அவைத்தலைவர் மற்றும் நகர்மன்ற கட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு அச்சக தொழிற்சங்க பொதுச்செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.**

**மொழிப்போர், ஈழத்தமிழர் பாதுகாப்பு, எரிசாராய கமிஷன் ஆணை நகல் எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**